**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 56/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-12/PW- 10 | Village: |
| Name | : கிருஷ்ணன், இரண்டாம் நிலை காவலர் | Age : |
| | | Taluk : |
| Father's/Husband's Name | : | |
| | | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 12/07/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் தலைமை காவலர் திருமதி கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நடுக்காவேரி காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04/11/2019 ம் தேதி நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் 2 ம் நிலை காவலராக பணியில் இருந்தபோது, கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.16/2019 வழக்கில் 1 வது எதிரியை நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெற்று மருத்துவ பரிசோதனைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ பரிசோதனை முடித்து திருவிடைமருதூர் கிளை சிறையில் எதிரியை ஒப்படைத்து நிலையம் ஆஜரானேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. 1வது எதிரியின் பெயர் தெரியுமா என்றால் பெயர் தற்போது ஞாபகமில்லை. எந்த தேதியில் அவரை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றேன் என்றால் 04/11/2019 ம் தேதி அழைத்து சென்றேன். 1வது எதிரியை எங்கிருந்து அழைத்து சென்றேன் என்றால் திருவிடைமருதூர் கிளை சிறையில் இருந்து அழைத்து சென்றேன்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-8/PW- 9 | Village: | |
| Name | : ராஜீவ்காந்தி | Age | :38 |
| Father's/Husband's Name | : ஜெயராமன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 12/07/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் தலைமை காவலர் திருமதி கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது வண்டுவாஞ்சேரியில் வசித்து வருகிறேன். நான் சென்ட்டிரிங் வேலை செய்து வருகிறேன். 1வது எதிரியை எனக்கு தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் சென்ட்ரிங் வேலைக்கு ஆள் அழைத்து வருவதற்காக இரு சக்கர வாகனத்தில் சேசம்பாடிக்கு சென்றுவிட்டு தண்டாளத்திற்கு சென்று சத்தியராஜ் என்ற நபரை அழைப்பதற்காக சென்றேன். சத்தியராஜ் வீட்டிற்கு 1வது எதிரி அடிக்கடி போவது வருவதை நான் பார்த்திருக்கிறேன். 1வது எதிரி சத்தியராஜ் வீட்டிற்குள் சென்று வருவது எனக்கு உறுதியாக தெரியும். சத்தியராஜின் தங்கை கர்ப்பமாகிவிட்டதாக சொன்னார்கள். அப்போது நான் சத்தியராஜிடம் 1வது எதிரி அவர்கள் வீட்டிற்கு

போவதை நான் பார்த்துள்ளேன் என்று சொன்னேன். இது சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் நாச்சியார்கோவில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. பாதிக்கப்பட்ட பெண்ணை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சத்தியராஜ் தெரியுமா என்றால் தெரியும். அவர் என்னிடம் வேலை செய்து வருகிறார். சத்தியராஜ் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் சேசம்பாடியில் வசித்து வருகிறார். பாதிக்கப்பட்ட பெண் சசிகலா சத்தியராஜிக்கு என்ன உறவு என்றால் தங்கையாவார். உடன் பிறந்த தங்கையா என்று எனக்கு தெரியவில்லை. 1 வது எதிரி யாருடைய வீட்டிற்கு போவார் என்றால் சத்தியராஜ் வீட்டிற்கு போவார். 1 வது எதிரி பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டிற்கு செல்வது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் அங்கு தான் வேலை செய்து வருகிறேன். பாதிக்கப்பட்ட பெண் சசிகலாவின் வீடு தெரியுமா என்றால் தெரியாது. சத்தியராஜ் வீடு மட்டும் தான் தெரியும்.

2. வழக்கு சம்மந்தமாக என்னை யார் விசாரணை செய்தார்கள் என்றால் போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். கையொப்பம் வாங்கிய தாளில் எழுதியிருந்தார்களா என்றால் எழுதியிருந்தார்கள். என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 4 | Village: | |
| Name | : சத்யா | Age | :34 |
| Father's/Husband's Name | : சத்தியமூர்த்தி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 12/07/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் தலைமை காவலர் திருமதி கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் தேதி ஞாபகமில்லை. 3 வருடம் ஆகிவிட்டது. என்ன சம்பவம் என்று தெரியுமா என்றால் எதிரி ரகுபதி என் தங்கையை லவ் பண்ணி கல்யாணம் செய்து கொள்வதாக சொல்லி ஏமாற்றிவிட்டார். அவரை கேட்டதற்கு கல்யாணம் செய்வதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டார். அவர் வீட்டில் உள்ளவர்கள் சேர்ந்து என்னை அடிக்க வந்தார்கள். புகார் கொடுத்தபோது நான் இருந்தேனா என்றால் நானும் இருந்தேன்.

2. எனது தங்கை வேலைக்கு செல்கிறாரா என்றால் வீட்டில் தான் இருந்து வருகிறார். எனது பெற்றோர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் காளவாய் வேலைக்கு சென்று வருகிறார்கள். எனது தங்கையும் எனது பெற்றோர்களுடன் வேலைக்கு சென்றுவருகிறார் என்றால் சரியல்ல. வீட்டில் தான் இருந்து வருகிறார். எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சீதா

யார் என்றால் ரகுபதியின் அண்ணன் ஆவார். சீதாவை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியும். சீதா என்ன செய்தார் என்றால் சீதா எனது தங்கையின் கருவை கலைப்பதற்காக மாத்திரை வாங்கி கொடுத்துள்ளார். ரகுபதி தான் அதை வாங்கி கொடுக்க சொல்லியுள்ளார். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது தங்கை கூறி தான் எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**